முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1279

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.03.2023**, வெள்ளிக்கிழமை

1. பிரம்ம சக்தியே அரங்காவாழ்க
   பிரணவசித்தியே தேசிகா வாழ்க
   வரம்பல தந்து மக்களை வாழவைக்க
   வள்ளலாய் வந்த யோகியே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 17 ம் நாள், 31.03.2023, வெள்ளிக்கிழமை)
   தாழ்விலா அரங்கனின் பிரணவக்குடில் நாடி
   தர்மத்தை காக்கும் அன்பர்கட்கு
3. அன்பர்கட்கு இனி பிறவா பேறு
   அருளுவேன் அரங்கன் வழி ஆசியாக கிட்டும்
   இன்பமுற அரங்கன் தீட்சை ஏற்று
   எக்கணமும் எங்கள் நாமஜெபத்தில் இருப்பவர்க்கு
4. இருப்பவர்க்கு வினைகள் அகன்றோடி
   இனிதுன்பம் அனுகாத பாதுகாப்பாய் மாறி
   கருத்தாக அவர்கள் விரும்புகின்ற வண்ணம்
   கலியுகத்தில் எல்லா காரியங்களும் சித்தி கண்டு
5. கண்டுமே இல்லறத்தோடு கூடிய
   கலியுகத்தில் ஞானவான்கள் என்கின்ற அடையாளம்
   வல்லமைபட பெருகி வரும் உலகோரெல்லாம்
   வாழும் ஞானி அரங்கன் வழி எல்லா சித்தியும்
6. சித்தியும் கண்டு பெரும்பேறு காண்பர்
   சிறப்பறிவு கூடி இனிதே மறுப்பின்றி
   அரங்கன் அருளாலும் தயவாலும்
   ஆறுமுகன் என் ஆசிபட கலியில் ஞானிகள் ஆவர்
7. ஆகவே அரங்கன் தொடர்பு கூட்டி ஐயமற தர்மத்தை செய்துகொண்டு
   ஆன்மீக உயர்வழியாம் சன்மார்க்க நெறி
   இன்பமுற ஏற்று அகலாவண்ணம்
   இனிதே தொடர்ந்து ஞானிகள் பூஜை

8. பூஜை செய்து தான் பெற்றபயனை
புண்ணியமாக மற்றவர்க்கும் வழிகாட்டிவர
வருகின்ற மக்களெல்லாம் வையகத்தில்
வாழ்வாங்கும் வாழும்படி இனிதே

9. தருகின்ற குணம்பெருகி தயவின் சக்திவழி
தரணியில் தவசியாக ஞானியர்களாக சிறந்து
சிறந்துமே தன்னிலை உயர்வதோடு
செப்பிடுவேன் உலகையும் மாற்றி பெரும்பேறு காண்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–